**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 11** |
| **Name** | **:** | **திரு. கண்ணன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.01.2024**

எதிரி 2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் உசிலம்பட்டி, பேரையூர் தாலுகா, சாப்டூரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் 2 வது எதிரியைத் தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் வரச்சொன்னதன் பேரில் இன்று நீதிமன்றத்திற்கு வந்தேன். வேறு எதுவும் நான் கேள்விப்படவும் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 23.09.2016 ம் தேதியன்று

சாப்டுர் கேணி அருவி அருகே நான் ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தேன் என்றும் கேணி அருவி அருகே எப்போதும் நிறைய பேர் வந்து போவார்கள் என்றும் மது குடிப்பவர்களும், காதலர்களும் வெளியூரில் இருந்தும் வந்து செல்வார்கள் என்றும் அதனால் 23.09.2016 ம் தேதியன்று யார் கேணி அருவி அருகே வந்து சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்குப் பயந்து அவர்களைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்குப் புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை